அமைச்சர் பி. கே .சேகர்பாபு அன்று (01.05.2025) , ராயபுரம் மண்டலம், வார்டு-58, ராட்டிலர் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டில் உள் அரங்க கிரிக்கெட் வலைதள பயிற்சி மையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா, மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, நியமனக்குழு உறுப்பினர் சொ. வேலு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதி இளம் சுருதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்.டி.மதன்குமார் முன்னிலை! இ.பாஸ்கர் – ஆர்.ஸ்டாலின் தலைமையில்

புழல் ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் நீர் - மோர்!

செ.யுவராஜ் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு வழங்கினர்!

சென்னை,மே.3-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதி உட்பட்ட புழல் ஒன்றிய இளைஞரணி சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆணைப்படி கோடை வெப்பத்தில் மக்களை காக்க மக்களுக்கு நீர்மோர் தர்பூசணி குளிர்பானம் வெள்ளரிக்காய் வழங்கப்பட்டது.

புழல் ஒன்றியம் தீர்த்தங்கிரியம்பட்டு திமுக அலுவலகம் அருகே நிகழ்ச்சி தொடங்கியது. இதில் மாவட்ட செயலாளர் மற்றும் மாதவரம் தொகுதி உறுப்பினர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ புழல் ஒன்றிய பொறுப்பாளர் ச. அற்புதராஜ் ஆலோசனைப்படி மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி மதன்குமார் முன்னிலையில் மாவட்ட நெசவாளர் அணி தலைவர் இ.பாஸ்கர் மற்றும் தீர்த்தங்கீரையம்பட்டு கிளை செயலாளர் ஆர். ஸ்டாலின் தலைமையில் புழல் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் செ. யுவராஜ் ஏற்பாட்டில் மக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் பேருந்தில் செல்பவர்களுக்கும் நீர்மோர் தர்பூசணி குளிர்பானம் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி.கே இனியன்,கேபிள் த. வேல்கனெக்சன், சி.எஸ்.எஸ்.டி சீனிவாசன், முன்னாள் புழல் ஒன்றிய செயலாளர் மற்றும் மாவட்ட பிரதிநிதி நா.ஜெகதீசன் மாவட்ட அதிதிராவிடநல்குழு துணை அமைப்பாளர் தங்கராஜ்,ஜெகன் தீர்த்தங்கீரையம்பட்டு ஊராட்சி நிர்வாகிகள் ஒன்றிய பிரதிநிதி A.கஜபதி மற்றும் டில்லி ரமேஷ் ,பாலவி நாயகர் நகர் கிளை செயலாளர் ஆர்.டி.தேவதாஸ், அத்திவாக்கம் கிளை செயலாளர் பி.சுரேஷ், காமாட்சி அம்மன் நகர் கிளை செயலாளர் s.அந்தோணி, விவேக் அக்பர் நகர் கிளை செயலாளர் தேரா. அருண்குமார், மூன்னாள் கிளை செயலாளர் இ.ஞானசேகரன் கிளை துணை செயலாளர் என்.தேவானந்தம் காமாட்சி அம்மன் நகர் கிளை அவை தலைவர் R.நெடுமாறன் விவேக் அக்பர் நகர் கிளை துணை செயலாளர் மோசஸ், ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ரமேஷ் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.டேவிட் நாவலன் அ.மணிமாறன் ர.ஐயப்பன் ம.குறள்ரசன் உ.பிரேம்குமார் சே.அஸ்வின் மற்றும் ஜோதி,குப்பாமனிதோப்பு கிளை செயலாளர் ஜி.தினேஷ் , முன்னாள் வார்டு உறுப்பினர் சாக்ரடீஸ், மற்றும் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி அமைப்பாளர் எ ஸ். ஸ்டாலின் துணை அமைப்பாளர் எம்.டி மோகன், மாதவரம் தெற்கு பகுதி அமைப்பாளர் வினோத்குமார், திருவொற்றியூர் மேற்கு பகுதி ஆர்.சி.சதீஷ், மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

மற்றும் நீர்மோர் வழங்கிய தீர்த்தங்கரையம்பட்டு ஊராட்சி பொதுமக்களுக்கு குளிர்பானங்கள் வாங்கியதற்கு பொதுமக்களும் வியாபார பெருமக்களும் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சருக்கும் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் தங்களது நன்றியை தெரிவித்து கொண்டார்கள்.

ஜாதிவாரி மக்கள் கணக்கெடுப்பு பெரியார் மண்ணுக்குக் கிடைத்த வெற்றி!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - ராகுல்காந்தி - இந்தியா கூட்டணியினருக்குப் பாராட்டு!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 3-

ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில் ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்ற முடிவு பெரியார் மண்ணின் தொடர் போராட்டங்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும், இதற்காகத் தொடர்ந்து குரல் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் இளந்தலைவர் இராகுல் காந்தி உள்ளிட்ட இந்தியா கூட்டணியினரின் முயற்சியே காரணம் என்றும், சமூகநீதியின் முக்கியத்துவத்தை எதிர்வரும் மாநிலத் தேர்தல்களைக் கணக்கில் கொண்டேனும் ஒன்றிய அரசு ஏற்றுக் கொண்டிருப்பதை வரவேற்பதாகவும், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

30.04.2025 அன்று மோடி தலைமையில் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தில், வரும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை (சென்சஸ்), ஜாதிவாரிக் கணக்கெடுப்பாக நடத்துவது என்று தனது கொள்கை முடிவாக எடுத்து, அதனைத் தீர்மானமாக நிறைவேற்றியிருப்பதாக, ரயில்வே அமைச்சரான அஸ்வினி வைஷ்னவ் அவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்து அறிவித்துள்ளார்.

காலந்தாழ்ந்த அறிவிப்பென்றாலும் வரவேற்கிறோம்!

கடந்த 10 ஆண்டுகளாக எதிர்க்கட்சிகளான இண்டியா கூட்டணிக் கட்சிகளால் வற்புறுத்தி வரப்பட்ட

இந்த ஜாதிவாரிக் கணக்கெடுப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் அவசியம் இடம்பெறுவதன் மூலம் மக்களுக்குச் சமூகநீதி கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். இதனைத் திராவிடர் கழகமும், தி.மு.க. போன்ற திராவிட இயக்கங்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதும், அதனை ஏற்காமல், "இது ஜாதியை வலியுறுத்தவே உதவும். ஆகவே இக்கோரிக்கையை ஏற்க முடியாது" என்று ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. மறுத்தே வந்த நிலையில், திடீரென்று மோடி தலைமையிலான அமைச்சரவை, இதற்கு முன் கூறிவந்த தங்களது நிலைப்பாட்டிற்கு மாறாக 'யு-டர்ன்' போட்டு, ஜாதிவாரிக் கணக்கெடுப்பை இந்த வரும் சென்சஸிலேயே நடத்துவோம் என்று கூற முன்வந்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு; "Better late than never" - செய்யாமல் இருப்பதைவிட, கொஞ்சம் காலம் தாழ்த்திச் செய்தல் வரவேற்கத்தக்கதுதான் என்பதற்கேற்ப இந்த அறிவிப்பு வந்துள்ளது.

முதலமைச்சர் உள்ளிட்ட இந்தியா கூட்டணியினரின் வெற்றி!

ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களுக்கு வெற்றி என்று உரிமை கொண்டாடும் நிலை - இயல்புதான்; என்றாலும் உள்ளபடி இந்த வெற்றிக்கு உரியவர்கள் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் முதல்வரும், காங்கிரஸ் கட்சியும், அதன் தலைமையும், குறிப்பாக ராகுல் காந்தி அவர்களும் அதன் வழிகாட்டும் தலைவர் திருமிகு. சோனியா காந்தி உள்ளிட்ட இண்டியா கூட்டணியினரும்தான். ஜாதிவாரிக் கணக்கெடுப்பு வேண்டும் என்பதைக் கடந்த 2 ஆண்டுகளாக நாடு முழுவதும் தொடர்ந்து முழங்கி வந்ததோடு நாடாளுமன்றத்திலும் வற்புறுத்தி வந்தனர்.

இப்போது அந்த கோரிக்கை, பி.ஜே.பி. அரசால் ஏற்கப்பட்டிருக்கிறது. இந்த கோரிக்கையை வைத்த பல அரசியல் கட்சிகளும் இதனை வெற்றியாகப் பார்ப்பதை நாம் விவாதப் பொருளாக்கவில்லை.

இந்த அறிவிப்பினை செயல்வடிவமாக்கிட இதனைத் தொடங்குவதையும், கால அறிவிப்பினையும் அதற்கான பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டையும் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கையின்படி அமைத்தல் அவசரம்; அவசியம்.

அரசியல் காரணங்களுக்கான பா.ஜ.க. போட்ட 'யுடர்ன்'!

பா.ஜ.க. தனது முந்தைய நிலைப்பாட்டில் நேர் எதிரிடையாக இப்படி ஒரு அறிவிப்பை, முடிவை அமைச்சரவை மூலம் எடுப்பது, 'அடுத்த சில மாதங்களில் நடைபெறவிருக்கும் உ.பி.க்கு அடுத்த பெரிய மாநிலமான பீகார் சட்டப்பேரவைத் தேர்தலை மனதிற்கொண்டே' என்று அரசியல் நோக்கர்கள் கூர்ந்து கவனித்து நாம் கோடிட்டு காட்டத்தான் வேண்டும்.

இப்படி ஒரு சமூகநீதிப் பாதுகாப்புக்கான திட்டத்தின் அறிவிப்பு, சரிந்த தன் செல்வாக்கையும், வாக்கு வங்கியையும் கட்டமைக்க இப்போது தேவைப்படுகிறது என்பதை பிரதமர் மோடியும், பி.ஜே.பி.யும் களநிலவரம் கண்டபிறகு முடிவுக்கு வந்திருக்க வேண்டிய நெருக்கடிக்கு தள்ளப்பட்டிருகிறார்கள் என்பது கண்கூடான எதார்த்தம் ஆகும்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 246-இன் கீழ் ஒன்றிய அரசின் தனி அதிகாரங்களில் 69 அயிட்டமாக 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்வது குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒன்றிய அரசுக்கான அதிகாரம் ஆகும்.

இது 2021-ஆம் ஆண்டே நடைபெற்றிருக்க வேண்டிய இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு - சென்சஸ் (Census) 'கோவிட்' தொற்று நோயைக் காரணம் காட்டி பா.ஜ.க. ஒன்றிய அரசால் தள்ளிப்போடப்பட்டே வந்தது.

காலதாமதம் கூடாது

அதனால்தான் மோடி அரசின் இந்த திடீர் முடிவை வரவேற்கிற கட்சிகள் கூட, அதன் பணி தொடங்விருக்கும் காலம், அதற்கான நிதி ஒதுக்கீடு முதலியன அறிவிக்கப்பட மேலும் காலம் தாமதிக்காமல் மக்கள் தொகை கணக்கெடுப்பை விரைவுபடுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பிற்படுத்தப்பட்டவர்களை அடையாளப்படுத்தும் தகுதிக் கூறுகளாக, தெளிவாக Socially and Educationally Backward class என்று முதலாவது சட்டத்திருத்தம் மூலம் டாக்டர் அம்பேத்கர் (சட்ட அமைச்சராக இருந்து) கொண்டு வந்த திருத்தத்தை, திட்டமிட்டே உயர்ஜாதி பார்ப்பன ஏடுகள் ஆங்கிலச் சுருக்கமாக (Acronym) SEBC என்று குறிப்பிட்டு, பின்னர் Socially and economically என்று திரித்து வெளியிட்டது அறிவு நாணயமற்ற ஆரிய விஷமம் ஆகும்.

தற்போது ஜாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவித்திருப்பது பெரியார் மண்ணுக்கும் மக்களுக்கும் கிடைத்த வெற்றி. இதற்கு முழுக் காரணம் இந்தியா கூட்டணித் தலைவர், நமது முதல்வர் ஜாதிவாரிக் கணக்கெடுப்பை வலியுறுத்தி, தனி தீர்மானமே சட்டப் பேரவையில் நிறைவேற்றியதும், தலைநகர் டெல்லியில் பிரதமர் மோடியை நேரில் சந்தித்து தனி மனு ஒன்றையே ஜாதிவாரி கணக்கெடுப்பை வலியுறுத்தி தந்து திரும்பினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

50 சதம் (செயற்கை) உச்சவரம்பு பற்றி தனியே விளக்குவோம். இந்த ஜாதிவாரிக் கணக்கெடுப்பில் ஒடுக்கப்பட்டோருக்கு உரிய பங்களிப்பு கிடைக்க வாய்ப்பு அதிகம் ஏற்படும்.

முதலமைச்சரின் முன்னோக்கும், தமிழ்நாட்டின் நிலைப்பாடும் சரியே!

கவனத்திற்குத் தப்பிவிடக்கூடாத மற்றொரு முக்கியச் செய்தி என்னவென்றால்,

தி.மு.க. அரசு, தனியே தமிழ்நாட்டிற்கென ஜாதிவாரி கணக்கெடுப்பை எடுக்க முன்வராததைப் பெரிய குற்றம் போல் பிரச்சாரம் செய்து, சமூகநீதி வித்தைக்காரர்கள் சிலர் வர்ணித்தார்கள்.

அவர்களுக்கு ஒன்றிய அரசின் அமைச்சர் இந்த அமைச்சவரையின் முடிவை அறிவித்துவிட்டு, "தனித்தனியே மாநில அரசுகள் கணக்கெடுப்பு நடத்த வேண்டியதில்லை; அவை வெறும் 'சர்வேயாகத் தான்' கருதப்படும்; மத்திய சென்சஸ் மூலம் வருவதே சரியான அதிகாரப்பூர்வமாக அமையும்" என்றும் கூறியுள்ளதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

நமது முதல்வரின் முன்னோக்கு இதில் எவ்வளவு கூர்மையானது என்பதும் புரிந்துகொள்ள வேண்டியதாகும்.

சிலருக்கு சமூகநீதி அரசியல் பேரம்; திராவிடர் இயக்கத்தவர்களுக்கு உயிர் மூச்சுக் கொள்கையாகும். அது இப்போது களங்களில் பெறும் வெற்றிகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

காலந்தாழ்ந்தாலும், ஒன்றிய அரசின் முடிவை வரவேற்கிறோம். உடனடியாகச் செய்யப்பட அழுத்தம் தர அனைவரும் ஆயத்தமாவோம்.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கோவை வ.உ.சி மைதானத்தில்

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அரசுப் பொருட்காட்சி!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்!

கோவை, மே 3-

கோவை வ.உ.சி மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசு பொருட்காட்சியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

கோவை வ.உ.சி மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரசு பொருட்காட்சியினை 01.05.2025 மே தினத்தன்று தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இதன் பின்னர் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள், செயல்பாடுகளை, அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பொருட்காட்சிகளில், அரசின் திட்டங்களும், சாதனைகளும் சிறந்த முறையில் விளம்பரப்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம, நகர்ப்புற மக்கள், அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் அறிந்து கொண்டு, தேவையான தகவல்களைப் பெறுவதுடன், பொழுது போக்கு அம்சங்களையும் கண்டுகளித்து, புத்துணர்வு பெறுவதற்கு அரசுப் பொருட்காட்சிகள் வழிவகை செய்கின்றன.

1978 முதல் 2025 ஆம் ஆண்டு தற்போது வரை 226 பொருட்காட்சிகள் நடைபெற்று உள்ளது. கோயம்புத்தூர் அரசுப் பொருட்காட்சி 227 வது பொருட்காட்சியாகும். இதுவரை கோயம்புத்தூரில் 37 பொருட்காட்சிகள் நடைபெற்றுள்ளது. தற்போது நடைபெறவிருப்பது 38 ஆவது பொருட்காட்சியாகும். 202425 ஆம் ஆண்டில் நடைபெற்ற மதுரை, கோயம்புத்தூர், சேலம், கடலூர், திருநெல்வேலி, வேலூர், தஞ்சாவூர் என 7 முக்கிய நகரங்களில் நடத்தப்பட்ட அரசு பொருட்காட்சிகளை 5,57,755 பார்வையாளர்கள் கண்டு களித்துள்ளனர்.

இதன் வாயிலாக 81 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் வருவாய் அரசிற்கு ஈட்டப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றிற்கு 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அரசுப் பொருட்காட்சி, கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாவட்டங்களில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்படுகிறது. மேலும், அனைத்து மாவட்ட மக்களும் பயன்பெறும் வகையில் 4 மாவட்டங்களில் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. செய்தி மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வனத்துறை, வேளாண்மைத் துறை, காவல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, கூட்டுறவுத் துறை, வருவாய்த் துறை, சமூக நலத்துறை, தோட்டக் கலைத் துறை, பொதுப் பணித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, பள்ளிக் கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கைத்தறி மற்றும் கதர் கிராமத் தொழில்துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, பிற்படுத்த ப்பட்டார், மிகப் பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மீன்வளத்துறை என மொத்தம் 26 அரசுத் துறைகளும், கோயம்புத்தூர் மாநகராட்சி, ஆவின், மாசு கட்டுப்பாட்டு வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், மகளிர் மேம்பாட்டுக் கழகம் என மொத்தம் 7 அரசு சார்பு நிறுவனங்கள் என மொத்தம் 33 துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பொருட்காட்சியில் பங்கேற்கும் 26 அரசுத் துறை களுக்கும், அரங்கம் அமைப்பதற்கு 77 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பொருட்காட்சி இன்றிலிருந்து தொடங்கி 45 நாட்கள் நடைபெறவுள்ளது. மாலை 4.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை திறந்திருக்கும். பொதுமக்கள் கடந்த ஆண்டை போல இந்த ஆண்டும் நல்ல வரவேற்பினை அளிக்கவேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், விடியல் பயண திட்டம், கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை, கலைஞரின் கனவு இல்லம் திட்டம் உள்ளிட்ட பல்வேறு அரசின் திட்டங்கள் குறித்து விளக்கும் வகையில் அரங்குகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்காட்சியில் பொழுதுபோக்கு அம்சம் உட்பட தனி உரிமையினங்கள், தனியார் அரங்கு மற்றும் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. அரசுப் பொருட்காட்சி நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.15/ம், சிறுவர்களுக்கு ரூ.10/ம், மாணவ, மாணவியருக்கு ரூ.5/மாக வசூலிக்கப்படுகிறது. இதில் கடந்த 2024 கோயம்புத்தூர் அரசுப் பொருட்காட்சியினை 1,68,433 பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர். இப்பொருட்காட்சியின் நுழைவுச் சீட்டு மற்றும் ஏலம் மூலம் அரசிற்கு ரூ.44.30 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அரசுப் பொருட்காட்சி கோயம்புத்தூரில் இன்று தொடங்கி வைக்கப்பட்டு, இப்பொருட்காட்சி தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறும். எனவே, பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று அரசு நல திட்டங்களையும், அரசின் செயல்பாடுகளையும் அறிந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் வழிகாட்டுதலின்படி, 15 வது மண்டலக் குழுத் தலைவர், பகுதிச் செயலாளர் எ.மதியழகன் ஆலோசனைப்படி, தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சோழிங்கநல்லூர் கிழக்குப் பகுதி, 194 வது வட்டத்தில் மாமன்ற உறுப்பினர் விமலா கர்ணா தூய்மை பணியாளர்கள், சுகாதார பணியாளர்கள், மெட்ரோ பணியாளர்கள் மற்றும் மாநகராட்சி பணியாளர்களுக்கு புத்தாடை மற்றும் அறுசுவை விருந்து வழங்கினார். உடன் 194 (அ) வட்டக் கழகச் செயலாளர் குங்ஃபூ மாஸ்டர் எஸ்.கர்ணா மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் பாடியநல்லூர் சுற்றுவட்டார தமிழ்நாடு டயர் டியூப் பழது பார்க்கும் உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலச் சங்கம் சார்பாக பாடியநல்லூர் ஊராட்சியில் மாபெரும் இரத்ததான முகாம் மற்றும் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது. இந்நிழச்சியை சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் துவக்கி வைத்தார், உடன் நா.பரசுராமன். முகமது அலி, இரத்தன மாலா. சிவசங்கர். கண்ணன் ஆகியோர் உடன் இருந்தனர்.

தாம்பரம் மாநகர தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் தொழிலாளர் தின விழா முன்னிட்டு மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் சிட்லபாக்கம் இரா.விஜயகுமார் தலைமையில் பகுதிச் செயலாளர் இரா.சுரேஷ் வரவேற்புரையில் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ், ஆகியோர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி தொகை, தொழிலாளர்களை கௌவரித்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழுத் தலைவர் டி.காமராஜ், எஸ்.இந்திரன், வ.விஜயரங்கன், கி.வேல்மணி, க.தேவேந்திரன், சிட்லபாக்கம் இ.மனோகரன், சானிட்டோரியம் சி.சுரேஷ், சி.ஜெகன், இரா.ராஜா, ஆர்.சதீஷ்குமார் உள்ளிட்ட கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்

மேயர் ஆர்.பிரியா (01.05.2025) அன்று உழைப்பாளர் தினத்தினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மலேரியா பணியாளர்களுக்கு நல உதவிகளை வழங்கி பணியாளர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் சுட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் டாக்டர் கோ. சாந்தகுமாரி, தலைமைப் பொறியாளர் (பொது) திருமதி எஸ். ராஜேஸ்வரி, தலைமைப் பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) கே.விஜயகுமார் மற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.